வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

# ஈழநாடு

Eelanadu

07.10.2020 புதன்கிழமை

விலை ரூ. 20/=

## 173 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை யாழில் எவருக்கும் தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஒக் 07

சுய தனிமைப்படுத்தப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள 173 பேருக்கு யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கு கோரோனா தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

173 பேரில் கம்பஹாவை சேர்ந்த 9 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

## யாழ்ப்பாணம் முடக்கப்படுமா? பி.சி.ஆர். முடிவே தீர்மானிக்கும்



யாழ்ப்பாணம்,ஒக்.07

“யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில், யாராவது ஒருவருக்கு கொரோனா தொற்று இனங்காணப்பட்டால், எதிர்வரும் நாட்களில் சில மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிவரும். சில பிரதேசங்களை முடக்கவேண்டிய தேவையும் ஏற்படும்”

02

## அபாயகரமான நிலையில் யாழ்ப்பாண மாவட்டம்!

### 3,915 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம்,ஒக்.07

யாழ்.மாவட்டம், தற்போது ஏற்பட்டிருக்கும் அனர்த்தத்தை மிகவும் சிக்கலான நிலையில், எதிர்கொள்ளும் பாரிய ஒரு அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் எச்சரித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்:- யாழ்.மாவட்டத்தில்,

02

## கம்பஹாவில் கட்டு மீறும் நிலைமை

# நேற்று மட்டும் 729 பேருக்கு கொரோனா!

### ஒரே நாளில் அதிகூடிய எண்ணிக்கை இது

கொழும்பு,ஒக்.07

இலங்கையில், ஒரே நாளில் அதிகூடிய எண்ணிக்கையிலான கொரோனா தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்ட நாளாக நேற்றைய தினம் பதிவாகியுள்ளது.

அதன்படி, நேற்று மட்டும் 729 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

02

## எங்கு சென்றிருந்தாலும் உண்மை சொல்லுங்கள்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

கொழும்பு, ஒக். 07

“கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தியிருந்தவர்கள் எங்கு சென்றிருந்தாலும் பரவாயில்லை, உண்மையை சொல்லுங்கள். இரகசியம் பாதுகாக்கப்படும்.” என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று கோரிக்கை

02

## தனியார் கல்வி நிலையங்கள் காலவரையறையின்றி பூட்டு!

### யாழ். செயலகக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஒக் 07

யாழ். மாவட்டத்தில் இன்று புதன்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் கால வரையறையின்றி மூடுவது என்று தீர்மானம்

02

## அத்தியாவசிய பொருள்கள் யாழ்ப்பாணத்தில் தாராளம்!

### வணிகர் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 07

“யாழ்ப்பாணத்தில் போதியளவு அத்தியாவசியப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன. பொதுமக்கள் தேவையற்ற வகையில் பொருள்களைக் கொள்வனவு செய்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டாம்.” - இவ்வாறு யாழ்ப்

02

## கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு இன்று கூடுகின்றது

கொழும்பு, ஒக் 07

கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள பல்வேறு பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழு இன்று மீண்டும் கூடவுள்ளது.

இதன் அடிப்படையில் பாராளுமன்றத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது .

இதன் போது புதிய ஊடகப்பேச்சாளர் நியமனம் மற்றும் புதிய கொரடா நியமனம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

02



## இணுவிலில் இளைஞனின் வீட்டுக்குள் நேற்று புகுந்த கும்பல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக் 07

ஆவா குழு உறுப்பினரின் வீட் டுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று அங்குள்ள பொருட்களைச் சேதப்படுத்தியும் மோட்டார் சைக்கிள்கள் இரண்டை தீவைத்து எரியூட்டியும் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்துள்ளது.

இணுவில் துரை வீதியில் உள்ள வீட்டிலேயே நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

02

## பாதுகாப்புக் கூட்டத்துக்கு மைத்திரி அழைக்கவில்லை

### ஜனாதிபதி ஆணைக்குழுவில் ரணில் நேற்றுச் சாட்சியம்



கொழும்பு,ஒக்.07

2018ஆம் ஆண்டு, ஒக்ரோபர் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்குத் தன்னை அழைக்க

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## அத்தியாவசிய...

பாணம் வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே யாழ்ப்பாணம் வணிகர் கழகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது கோரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறியுள்ள நிலையில் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றவேண்டும். இது மட்டுமன்றி சமூகத் தொற்று காரணமாக நாடு முடக்கப்படும் என்ற சந்தேகத்தினால் அத்தியாவசியப் பொருள்களை அதிகளவாக கொள்வனவு செய்கின்ற நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.இந்த நடவடிக்கை தேவையற்ற ஒன்று. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போதைய சூழலில் தேவையான அளவு அத்தியாவசியப் பொருள்கள் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் கையிருப்பில் உள்ளன. அது மட்டுமன்றி கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன. ஆகையால் தேவையற்ற முறையில் பொருள்களைக் கொள்வனவு செய்து தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்.அது மட்டுமன்றி ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் பொருள்களை வீடுகளுக்குக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கும் வர்த்தகர்கள் தயாராகவே உள்ளனர்.

அத்தோடு யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேசங்களிலும் உள்ள மக்களுக்கும் அங்குள்ள பிரதேச வர்ததகர்களுடாக பொருள்களை விநியோகிப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே, தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம்.இதேவேளை, அரசினால் இறக்குமதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களே கூடிய விலையில் விற்பனையாகின்றன. விலை ஏற்றம் வர்த்தகர்களால் ஏற்பட்டதல்ல. இறக்குமதியாளர்களால் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு அரசுதான் தடையை நீக்க வேண்டும் -என்றார்.

## அபாயகரமான...

கொரோனா தொற்று தீவிரம் காரணமாக, அவசரமாக மாவட்ட கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தை நடத்தியிருந்தோம்.

இந்தச் செயலணிக் கூட்டத்தில், மிகவும் முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினோம். அதன் பிரகாரம், கம்பஹா மாவட்டத்தில், ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள் என்ற அடிப்படையில் இனங்காணப் பட்டிருந்த, புங்குடுதீவைச் சேர்ந்த இருவர் இங்கு வருகை தந்திருக்கிறார்கள். கடந்த 30ஆம் திகதி மற்றும் மூன்றாம் திகதி இரண்டு பேர் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களில், 3ஆம் திகதி வந்தவருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அவருடன் நெருங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர், புங்குடுதீவு பகுதியில் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

அதேவேளை, வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 57 பேர், பொதுப் போக்குவரத்தில் மற்றும் ஏனைய இடங்களில் அந்தப் பெண்ணுடன் தொடர்பு பட்டனர் என்ற அடிப்படையில், தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதைவிட, நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுடன் பஸ்ஸில் பயணித்தனர் என்ற அடிப்படையில் 88 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மருதங்கேணிப் பகுதியில் குடாரப்பு கிராமத்தில் 73 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

9 பேர் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பபட்டுள்ளனர். இதனைவிட எழுவைதீவைச் சேர்ந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் சுயதனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவில் ஒருவருக்கு உறுதி செய்யப்பட்ட கொரோனா தொற்று காரணமாக, ஆயிரத்து 212 குடும்பங்களைச் சேர்ந்த 3,915 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அந்தப் பகுதியில் முழுமையான முடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்திலே யாழ். மாவட்டம் தற்போது, அனர்த்தத்தை மிகவும் சிக்கலான சூழ்நிலையில் எதிர்கொள்ளும் பாரிய ஒரு அபாயகரமான நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, இந்த அபாயகரமான சூழல் என்று நாங்கள் தற்பொழுது கருதப்பட வேண்டிய புங்குடுதீவுப் பகுதி முற்று முழுதாக முடக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும், ஏனைய பகுதிகளிலும், சில சில செயற்பாடுகளை அரசின் அறிவுறுத்தலின் பிரகாரம் மேற்கொண்டிருக்கின்றோம்-என்றார். (அ-எ)

## நேற்று மட்டும்...

திவுலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் பணி புரிந்த ஆடைத் தொழில்சாலை ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், இவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்தத் தொழில்சாலை ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 831 பேருக்கு இது வரை கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தின் கம்பஹா பொலிஸ் எல்லைப் பகுதிக்குள் மீண்டும் அறிவிக்கும் வரை நேற்று மாலை 6 மணி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (அ-எ)

## பாதுகாப்புக்...

வில்லை என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில், உண்மையைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முதல் தடவையாக சாட்சியமளிக்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டு, மைத்திரிபால சிறிசேன, பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு, 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற ஆட்சிமாற்றம் வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில், தன்னால் நூல் ஒன்றைக்கூட எழுத முடியும் என்று ரணில் தெரிவித்தார்.

மேலும், 52 நாள் அரசின் ஆட்சிக்காலத்தில், பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவிடம், அவருக்கு பாதுகாப்புச் சபைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டதா? எனத் தான் வினவியதாகவும், அவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் ரணில் குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முற்பகல் 10 மணியளவில் சாட்சியமளிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.

இருப்பினும், இடையில் முன்னாள் பிரதமருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக சாட்சியமளிப்பு பிற்போடப்பட்டதுடன் இது தொடரபில், ஆராய்ந்த ஆணைக்குழுவினர் எதிர்வரும் 13ஆம் திகதி மீண்டும் ஆஜராகுமாறு அறிவித்தனர். (அ-எ)

# "அச்சம் கொள்ளாதீர்கள்!"

## பிரதமர் மஹிந்த அறிவுரை

கொழும்பு,ஒக்.07

கொரோனா தொற்றின் அண்மைய பரவல் தொடர்பில், மக்கள் அச்சமடையத் தேவையில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொறுப்புடனும், எச்சரிக்கையுடனும் மக்கள் இருக்க வேண்டும். சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பில், டுவிட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள், அரசு, பொலிஸார் மற்றும் முப்படையினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர் என்று குறிப்பிட்டார். (எ)

## கூட்டமைப்பின்...

இப்போது கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராக உள்ள சுமந்திரன் தேர்தல் காலத்தில் நடந்துகொண்ட விதம் தமக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதுடன் இம்முறை தமக்கு ஊடகப்பேச்சாளர் பதவி மற்றும் கொரடா பதவி நிலைகளை வழங்கவேண்டும் எனக் கூட்டமைப்பின் பங்களிக் கட்சிகளான தமிழீழ விடுதலைக்கழகம் ( புளொட் ) தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ ) ஆகிய கட்சிகள் கூட்டாக வலியுத்தி வந்த நிலையில் இந்த கூடடம் இன்று இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னர் இடம்பெறவிருந்த கூட்டம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கலந்துகொள்ளாமையால் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தனியார்...

எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் வடக்கு மகாணா சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி உட்பட துறைசார் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்திலேயே யாழ். மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களை இன்று முதல் மறு அறிவித்தல் வரை மூடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், யாழ். மாவட்டத்தில் மக்கள் ஒன்றுகூடுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் சுற்றுலா மையங்கள், பூங்காக்கள் மற்றும் கடற்கரைகளிலும் அனுமதி மறுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## எங்கு...

விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கொரோனா தொடர்புகளைத்தேடி பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள் செல்லும்போது உரிய தகவல்களை வழங்குவதற்கு சிலர் தயங்குகின்றனர். ஏனெனில் சிலவேளைகளில் தவறான இடங்களுக்கு சென்றுள்ளனர். (உதாரணமாக சட்டவிரோத மது விற்பனை நிலையம்)

இவ்வாறு சட்டவிரோதமான இடங்களுக்கு சென்றதால் வழக்கு தொடுக்கப்படலாம் என அஞ்சுகின்றனர். ஆனால், வழக்கு தொடுப்பது எமது நோக்கம் அல்ல,

அந்த இடத்தில் யார், யார் இருந்தார்கள் என்பது உட்பட தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு தேவையான தகவல்களை திரட்டுவதே பிரதான நோக்கமாகும்.

அத்துடன், எங்கு சென்றார்கள், எப்படி சென்றார்கள் போன்ற விபரங் களை எல்லாம் வெளியிடமாட்டோம். எனவே, அதிகாரிகளிடம் உண்மையை கூறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்" - என்றார்.

## ஆவா...

கடந்த 26ஆம் திகதி யாழ். நகர் பெருமாள் கோயிலடியில் மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் என்ற இளைஞரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமற்றியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையிலேயே அவரின் வீட்டில் வன்முறைக் கும்பல் ஒன்றால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ்ப்பாணம்...

என்று எச்சரித்துள்ளார் யாழ். அரச அதிபர் க.மகேசன்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது அவர் இவ்வாறு எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இனிவரும் காலங்களிலாவது சுகாதார நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பஸ்ஸில் பயணிக்கும்போது ஆசனத்துக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லச் சாரதி மற்றும் நடத்துநர்களை நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம்.

பஸ்களையும் முறையாக தொற்று நீக்கி சேவையில் ஈடுபடுத்துமாறும் கோரியுள்ளோம்.

தற்போது, அரசு கட்டுப்பாட்டை முற்றுமுழுதாக விதிக்கவில்லை. இது ஒரு பகுதியளவில்தான் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டம் இன்னும் யாழ். மாவட்டத்தில் பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே, இந்த நிலைமையை உன்னிப்பாக அவதானித்து, கொரோனா தொற்றின் தீவிரத்தைக் கணித்து அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை அடுத்த சில மணி நேரங்களிலேயே நாங்கள் எடுக்கலாம் அல்லது ஓரிரு நாட்களில் நாம் எடுக்கவேண்டிய தேவை ஏற்படலாம். பொதுமக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும், ஒருங்கிணைந்து இந்த சுகாதார நடைமுறைகளை சமூக இடை வெளியைப் பேணி முகக்கவசங்கள் அணிவதும், கட்டாயமாக்கப்பட வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை தளர்வான காலத்தில் மக்கள் முண்டியடித்து பொருட்களைப் பெறுவதிலும், எரிபொருள் நிலையங்களில் நேரத்தை வீணாக்குவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத வண்ணம், நிலைமைகளை கவனிக்கும்படி நாங்கள் பிரதேச செயலாளர்களுக்கும் தொழில் நிறுவனங்களையும் கேட்டிருக்கின்றோம்.

இருப்பினும், யாழ்.மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதில், யாராவது ஒருவருக்கு கொரோனா தொற்று இனங்காணப் பட்டால், எதிர்வரும் நாட்களில் சில மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிவரும், சில பிரதேசங்களை முடக்க வேண்டிய தேவையும் ஏற்படும்-என்றார். (அ-எ)

ஈழநாடு
Eelanadu
07.10.2020 புதன்கிழமை
சார்வரி, புரட்டாதி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# தமிழர்கள் 20ஆவதுடன் மல்லுக்கட்ட வேண்டுமா?

இருபதாவது திருத்தமும் அரசியல் விளைவுகளும்' என்னும் தலைப்பில் இடம்பெற்ற ஆய்வரங்கில் 20ஆவது திருத்தச்சட்டம் முடியாட்சியை ஏற்படுத்தும் ஒரு திட்டமென்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு முடியரசன் போன்று செயற்படுவதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், அந்த முடியரசனின் ஆசீர்வாதத்துடன்தான், விசேட அதிரடிப்படை புடைசூழ தினமும் சுமந்திரன் வலம்வந்து கொண்டிருக்கின்றார். பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் சற்று அமைதியடைந்த சுமந்திரன் மீளவும் தனது தலையை நிமிர்த்துவதற்கு 20ஆவது திருத்தச்சட்டத்தை கையிலெடுத்திருக்கின்றார். சுமந்திரன் மட்டுமல்ல, தேர்தலில் தோல்வியடைந்த அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அடிக்கடி பேசி வருகின்றனர். நாடு சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்கின்றது என அனைவருமே கவலைப்படுகின்றனர். இவ்வாறு கூறும் சிலர், ஆட்சி மாற்றத்தையும் அதன் பின்னரான ரணில்-மைத்திரி அரசாங்கத்தையும் கடுமையாக விமர்சித்தவர்கள் என்பதையும் இந்த இடத்தில் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்னும் வாதத்தின் அடிப்படையில்தான் 2015இல், தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 19ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. ஒருவரிடம் முழு அதிகாரங்களும் குவிந்திருப்பதை தடுத்து, ஜனநாயகத்தை பாதுகாப்பதுதான் 19இன் இலக்கு என்றும் கூறப்பட்டது. இந்த அடிப்படையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, பிரதமரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. அதேவேளை, இரட்டைக் குடியுரிமையுடையவர் தேர்தலில் பங்குகொள்ள முடியாது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதெல்லையை 35 ஆக அதிகரித்தமை. அத்துடன் சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டமை. இவைகளெல்லாம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கொண்டு வரப்பட்டவைகளா - அல்லது சிங்கள ஆளும் வர்க்கத்தின் பிரச்னைகளை கையாளுவதற்காக கொண்டு வரப்பட்டவைகளா?

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 18ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டு வந்ததன் மூலம் மஹிந்தவை நோக்கி அதிகாரங்கள் குவிக்கப்பட்டன. இதனை முறியடிக்கும் வகையில்தான் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து உடனடியாகவே 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் அவை இல்லாமலாக்கப்பட்டன. அதேவேளை மீளவும் மஹிந்தவும் அவரது குடும்பத்தினரும் அதிகாரத்திற்கு வருவதைத் தடுக்கும் வகையிலும் சில ஏற்பாடுகள் புகுத்தப்பட்டன. இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக வருவதைத் தடுக்கும் ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டன. மஹிந்த ராஜபக்ஷ மீளவும் ஜனாதிபதியாவதைத் தடுக்கும் நோக்கில்தான் கொண்டுவரப்பட்டது. அதேபோன்று, மஹிந்தவின் குடும்பத்தைச் சேர்ந்த கோட்டாபய, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் வகையில்தான் இரட்டைக் குடியுரிமை விவகாரம் புகுத்தப்பட்டது. ஆனால், இறுதியில் மஹிந்தவுக்கு பதிலாக கோட்டாபயவை ஜனாதிபதியாக்குவதற்குத்தான் 19ஆவது திருத்தச்சட்டம் பயன்பட்டிருக்கின்றது.

இங்கு விடயங்களை ஆழமாகப் பார்த்தால் 18, 19, 20 ஆவது திருத்தச் சட்டங்கள் எவையுமே தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கொண்டுவரப்படவில்லை. புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்னைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை காணும் நோக்கில் எந்தவொரு திருத்தச்சட்டமும் இதுவரை கொண்டு வரப்படவில்லை. இதில் 13ஆவது திருத்தச்சட்டம் மட்டுமே விதிவிலக்கு. உண்மையில், இப்போது சுமந்திரன் போன்றவர்கள் பேச வேண்டியது 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலேயே அன்றி, 20ஆவது திருத்தச்சட்டம் பற்றியல்ல. ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை சரிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு துருப்புச் சீட்டாகவே இப்போது, அனைவரும் 20ஆவதுடன் மல்லுக் கட்டிக்கொண்டிருக்கின்றனர். உண்மையில், 20ஆவதுடன் தமிழர்கள் மல்லுக்கட்டுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில், 19ஆவது திருத்தச்சட்டம் தமிழர்களுக்கென்று தனித்துவமாக எதனையும் வழங்கவில்லை. தமிழர்களை, தமிழர்களாக அங்கீகரிக்காத சீர்திருத்தங்கள் தொடர்பில் தமிழர்கள் எதற்காக மல்லுக்கட்டவேண்டும்?

# மும்முனை நெருக்கடியில் அரசாங்கம்

- அலசுவது இராஜதந்திரி -

அரசாங்கம் மும்முனை நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதையே தற்சமயம் அவதானிக்கமுடிகிறது.

முதலாவதாக 20ஆவது திருத்தச்சட்டம் குறித்த சர்ச்சை. இரண்டாவதாக புதிதாக மீளவும் தலையெடுக்க ஆரம்பித்துள்ள கொரோனா அச்சுறுத்தல். மூன்றாவதாக, ஈஸ்டர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இடம்பெற்று வருகின்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை மற்றும் அதில் வெளிப்படுத்தப்பட்டுவரும் வியக்கவைக்கும் தகவல்கள்.

20ஆவது திருத்தச்சட்டம் குறித்து உயர்நீதிமன்றம் முன்பாக முன்வைக்கப்பட்ட 39 விசேட மனுக்கள் மீதான பரிசீலனையை உயர்நீதிமன்றம் நிறைவு செய்துள்ளது.

அத்துடன் தனது முடிவினை ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் உயர்நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளது.

ஒரு முற்று முழுதான சர்வாதிகார ஆட்சி முறைக்கு வித்திடும் அனைத்து அம்சங்களுடன் ‘குடும்ப ஆட்சி’ என்று தற்போது வர்ணிக்கப்படுகின்ற ஆட்சியை மேலும் பலப்படுத்தி, ஒரு முடியாட்சிக்கு ஒப்பான அரசாங்கத்தை அமைப்பதற்கு அடித்தளமிடுவதாகவே 20ஆவது திருத்தச்சட்டத்தை அவதானிக்கமுடிகின்றது.

13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதனை ஒரு சாபக்கேடு என்று வர்ணித்ததோடு இன்றுவரை 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரான போக்கையே தென்னிலங்கை அரசியல்வட்டாரம் கொண்டுள்ளது.

இலங்கையில் ஓர் அதிகாரப்பரவலாக்கத்துக்கு வழிவிடுவதாக 13ஆவது திருத்தச்சட்டம் இருக்கின்றதெனக் கருதுவதைவிட, இந்தியாவின் கைப்பாவையாக இலங்கை இருப்பதற்கே 13ஆவது திருத்தச்சட்டம் வழிவகுக்கின்றதென்ற கருத்தே தென்னிலங்கை அரசியல் அரங்கில் எதிரொலிக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையிலேயே தற்போது 20ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்படவுள்ள நிலையில் அதுகுறித்த சாதக-பாதக விமர்சனங்களும் காரசாரமானவையாக தெற்கில் எதிரொலிக்கின்றன.

முன்னாள் நீதி அமைச்சரும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருமான விஜேதாஸ ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 20ஆவது திருத்தச்சட்டம் குறித்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அரசியலமைப்பின் உத்தேச 20ஆவது திருத்தச்சட்டம் ஜனாதிபதியை ஒரு சர்வாதிகாரிக்கு ஒப்பான முழு அதிகாரங்களையும் கொண்டவராக மாற்றிவிடுகின்றது எனக்குறிப்பிட்டிருப்பதோடு, ஜனாதிபதி கோட்டாபய இந்த திருத்தச்சட்டத்தை அதிகார துஷ்பிரயோகமின்றி கையாளலாம். ஆனால், எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வருபவர்கள் 20ஆவது திருத்தச்சட்டத்தை உரியவகையில் கையாளாவார்களா என்ற கேள்வியை இன்று நாட்டின் முன்னணிச் சட்டத்தரணியாகவும் இருக்கும் விஜேதாஸ ராஜபக்ஷ எழுப்பியுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பலர் கூட 20ஆவது திருத்தச்சட்டம் குறித்து செய்வதறியாத நிலையில் இருப்பதையும் விஜேதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

### கொரோனா

இரண்டாவதாக, அரசுக்கு நெருக்கடியையும், தலையிடியையும் கொடுத்துள்ள விடயம் கொரோனா பரவலாகும்.

கொரோனா கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இலங்கையில் ஊடுறுக்கும் அறிகுறிகள் தென்பட்டபோது, கச்சிதமான முறையில் சகல முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு, அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

அத்துடன், கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பொதுத்தேர்தலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்தது.

ஆனால், தற்சமயம் கம்பஹா பகுதியில் உருவாகியுள்ள கொரோனா அச்சுறுத்தலை மூன்றாவது அலை என்று பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண அறிவித்திருப்பதோடு, நேற்று நண்பகல் வரை கம்பஹா பிரதேசத்தில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 567ஆக உயர்ந்துள்ளது என இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாவின் புதிய அச்சுறுத்தல் காரணமாக நாடு முழு அளவில் மீளவும் முடக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளே பலமாக இருக்கின்றன.

பாதுகாப்புப்படைகள் மீளவும் கொரோனா தடுப்பில் ஈடுபடுவதற்கான ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

மூன்றாவதாக, ஈஸ்டர் உயிர்த்த ஞாயிறு தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் வழங்கி வருகின்ற சாட்சியங்கள், ஒரு குழப்பகரமான சூழலை ஏற்படுத்தியுள்ளதுடன், மிகப்பாரதூரமான விடயங்களும் எவ்வாறு பூசிமெழுகி மறைக்கப்பட்டள்ளன என்பதையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

இதில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சகோதரரான ரியாஜ் பதியுதீன் விடுவிக்கப்பட்டமையும் தற்போது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

ரியாஜ் பதியுதீனுக்கு ஈஸ்டர் தாக்குதலில் நேரடி தொடர்பு இல்லை என்று தெரிவித்தே குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரை விடுதலை செய்துள்ளனர். ஆனால், இதுவொரு பாரபட்சமான நடவடிக்கை என்ற விமர்சனம் வலுவடைந்துள்ளது.

அரசதரப்பு இதுவிடயத்தில் அரசியல் அனுகூலங்களுக்காக பதியுதீன் சகோதரர்களுக்கு ஆதரவளிக்கின்றதென்ற கருத்தே வெளிவர ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், ஒரு மும்முனை நெருக்கடிக்குள்ளாகியுள்ள அரசாங்கம், இச்சவாலான மூன்று விடயங்களையும் எவ்வாறு கையாண்டு, எத்தகைய கோணத்தில் கையாளும் என்பதே தற்போது எழுந்துள்ள முக்கிய கேள்வியாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்

# கொழும்பு கலைப்பீட மாணவர் கவனத்துக்கு

கொழும்பு, ஒக் 07

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் அடுத்த வாரத்தில் பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசிக்கவேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முதலாம் மற்றும் மூன்றாம் வருடங்களுக்கான மாணவர்களுக்குரிய பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள கலைப் பீடாதிபதி, பரீட்சை அட்டவணை மீள் திட்டமிட்டு அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

# மூன்று பகுதிகளில் ஊடரங்கு தொடரும்

## உத்தரவைமீறிய 52 பேர் கைது

கொழும்பு, ஒக் 07

ஊரடங்கு உத்தரவைமீறிய 52 பேர் இதுவரை கைது செய்யப் பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.



கம்பஹா மாவட்டத்திலுள்ள மினுவாங்கொட, திவுலப்பிட் டிய மற்றும் வெயாங்கொட ஆகிய பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு அமுலில் உள்ளது. இந்நிலையிலேயே ஊரடங்கு உத்தரவைமீறிய 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இந்தப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்ணுக்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது?

## இனங்காணுமாறு கோருகின்றது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஒக் 07

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்ட பெண்ணுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட் டது என்பது இனங்காணப்ப டாமை மிகவும் பாரதூ ரமானதாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தின் செயலாளர் வைத்தியர் ஹரித அழுத்கே தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரி கள் சங்கக் கேட்போர் கூடத் தில் நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு: -

இலங்கையில் இதுவரை யில் இனங்காணப்பட்ட நோயாளர்களில் அவர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட் டது என்பதை இனங்காணக் கூடியதாக இருந்தது. ஆனால், இந்தப் பெண்ணுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட் டது என்பது இதுவரை இனங்காணப்படவில்லை.

எனவே, அவருக்குச் சமூகத்திலிருந்து தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும் என்று எம்மால் கற்பனை செய்ய முடியும். இது பாரதூர மானதாகும்.

அவர் தொழில் புரிந்த ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 1700 பேர் தொழில் புரிகின்றனர். 1700 தொழிலா ளர்களைக் கொண்ட இந்த தொழிற்சாலையில் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டதா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஒவ்வொரு பிரிவுகளி லும் தொழில் புரிபவர்க ளின் எண்ணிக்கை மட்டுப் படுத்தப்படாததால் 1700 பேருக்கும் அச்சுறுத்தல் நிலைமையே உள்ளது.

அந்தப் பெண் தொழில் புரிந்த ஒரு பகுதியில் மாத்தி ரம் அதாவது, அவருடன் நேரடியாகத் தொடர்புகளைப் பேணியவர்கள் 783 பேர் ஆவர். இது கந்தக்காடு பிரதேசத்தில் ஏற்பட்ட நிலைமை விட பாரதூரமானதாகும்.

கணிப்பீடுகளின் அடிப் படையில் பார்க்கும்போது, 99 இல் 69 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்றால் இது மிகவும் மோசமான நிலைமையாகும். எஞ்சியுள்ள 1600 பேரில் எத்தனை பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்படும்? இவர்கள் அனைவரும் நாடளாவிய ரீதியில் பரவலடைந்துள்ளனர்.

மினுவாங்கொடை பகுதியி லுள்ளவர்கள் மாத்திரம் இங்கு தொழில் புரியவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த பெண்ணுடைய சொந்த இடம் மினுவாங்கொடை அல்ல. ஹபராதுவை அவரது சொந்த இடமாகும். எனவே, மினுவாங்கொடை என வரையறுக்காமல் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும்- என்றார்.

# ‘முடக்கம்’ என்பது அடக்குமுறையே!

## இராணுவத் தளபதி கூறுகிறார்



கொழும்பு, ஒக் 07

**‘முடக்கம்’ என்பது எளிதான முறையாக இருந்தா லும் அது இலங்கை மக்கள் பிழைப்புக்கு விதிக்கப் படும் அடக்குமுறையாக அமையும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்ச்சியில் இணைந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்: -

கொரோனா தொற்றாளி அடையாளம் காணப்பட்ட துடன் உடனடியாக நாட்டை முடக்குவது முக்கியமானதல்ல. மாறாக, அந்தத் தொற்றாளியை இனங்கண்டு அதனூடாக சமூகப் பரவலை தடுப்பதே அவசியம்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய பெண்ணுக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப் பட்டவுடன் மூன்று பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அந்தப் பகுதிகளில் இருந்து அதிகமான மக்கள் வேலைக்கு வருவதைக் கருத்திற்கொண்டே மூன்று பொலிஸ் பிரிவுகளுக்கு மாத்திரம் இவ்வாறு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

ஜனாதிபதியுடன் கலந்துரை யாடிய பின்னரே அந்தப் பகுதி களில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

அந்த ஆடைத் தொழிற்சாலை யில் பணிபுரியும் 1400 பேரில் 495 பேரைத் தவிர ஏனைய அனைவரும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ளனர்.

ஏனைய 495 பேர் இலங்கை யின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கின்றனர். எனவே, அவர்க ளின் தொழிலை இடைநிறுத்தி னால் பாதிப்பு ஏற்படும்.

தொழிற்சாலைப் பகுதிகளை விட்டு வெளியேறியவர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு இராணுவத்தினால் பராமரிக்கப்படும் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சியவர்களில் பெரும் பாலானோர் இந்தப் பகுதியில் வசிக்கின்றனர் என்பதால், நாம் இது போன்ற ஒரு சூழ்நிலை யில் முழு முடக்கத்தை அமுலாக்கவில்லை.

அதனைச் செய்வது மிகவும் எளிதானது என்றாலும் அது நாடு முன்னேறும் வழியாக அமையாது-என்றார்.



# வவுனியாவில் 98 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை

வவுனியா, ஒக் 07

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தீவிரமடைந்ததையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வவுனியாவில் பல்வேறுபட்ட நபர்களிடம் நேற்று பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றுவரும் கம்பஹா மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த 90 பேருக்கு நேற்றுக் காலை வவுனியா பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையால் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், வவுனியா தோணிக்கல் ஆலடிப்பகுதியில் வசிக்கும் உறவினர்களை மினுவாங்கொடையில் இருந்து வருகைதந்து சந்தித்த பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அந்தக் குடும்பம் வவுனியாவில் தனிமைப்படுத்தப் பட்டிருந்தது.

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, 3 பிள்ளை கள் என 5பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அந்தப் பெண் தொடர்புகளைப் பேணியதாக தெரிவித்து வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் இரு பெண்களும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

# 302 இலங்கையர் நாடு திரும்பினார்

கொழும்பு, ஒக் 07

தொழில்வாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற மேலும் 302 இலங்கை யர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

அதன்படி கட்டாரிலிருந்து 35 இலங்கையர்கள் கட்டார் ஏயர் வேஸ் நிறுவனத்துக்குச் சொந்த மான கியூ.ஆர் -668 என்ற விமானத்தில் அதிகாலை 1.45 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந் தனர். அதேபோன்று கட்டார், டோஹாவிலிருந்து ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் -218 என்ற விமானத்தில் 7 இலங்கையர்கள் அதிகாலை 5.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும், துருக்கியிலிருந்து 260 இலங்கையர்கள் துருக்கிய ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான டி.கே -4930 என்ற விமானத்தில் இஸ்தான்புலி லிருந்து காலை 8.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் பி.சி.ஆர். சோத னைக்கு உட்படுத்தப்பட்ட துடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

# தீவிரவாதத்துடன் ரியாத்துக்கு நேரடித் தொடர்புகள் இல்லை

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு,ஒக் 07

**தீவிரவாதத்துடன் நேரடித் தொடர்புகள் இல்லாத காரணத்தாலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாத் பதியுதீன் விடுதலை செய்யப்பட்டார் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இருப்பினும் அவர் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பாக முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சமல் கூறினார்.

ஈஸ்டர் தாக்குலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாத் பதியுதீன், 5 மாதங்களின் பின்னர் கடந்த மாதம் 29ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்லடி பகுதியில் சடலம்

மட்டக்களப்பு,ஒக் 07

மட்டக்களப்பு கல்லடி டச்பார் இக்னேசியஸ் பகுதியில் உள்ள களப்பில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய கல்லடி டச்பார் இக்னேசியஸ் விளையாட்டு கழக மைதானத்துக்கு அருகில் இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலம் அடையாளம் காணாப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ஆட்பதிவுத் திணைக்களசேவை மூன்று தினங்கள் இடைநிறுத்தம்

கொழும்பு,ஒக்.07

ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமையகம் மற்றும் பிராந்தியஅலுவலகங்களில் இன்று புதன்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்குப் பொது மக்களுக்கான சேவைகள் இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இன்று புதன்கிழமை, நாளை வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவைகளை பொதுமக்கள்பெற்றுக் கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 5 பெண்கள் கைது!

வவுனியா, ஒக்.07

வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் விபசாரத் தொழிலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 5 பெண்களை வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலத்தின் கீழ் செயற்படும் போதைத்தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பழைய பஸ் நிலையப் பகுதியில் நேற்று முன் தினம் சோதனைகளை மேற்கொண்ட பொலிஸார் விபசாரத்தில் ஈடுபட முயற்சித்த குற்றச்சாட்டில் 5 பெண்களைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் குருநாகல்,முல்லைத்தீவு, நெடுங்கேணி,விசுவமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

## புலமைப்பரிசில், உயர்தரம் இறுதித் தீர்மானம் இன்று

கொழும்பு,ஒக் 07

இன்று வெளியாகவுள்ள பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான இறுதித் தீர்மானத்தைக் கல்வி அமைச்சு எடுக்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதனடிப்படையில் எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் மிகவும் தீர்மானம் மிக்கது எனவும் அவர் கூறினார்.

## ரிஷாத்தை புகழவில்லையாம்!



கொழும்பு, ஒக் 07

வவுனியா மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனைப் புகழ்ந்து தாம் கருத்து வெளியிடவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பாக ஊடகங்களில் வெளியாகிய செய்திகளை மறுத்துள்ள அவர், தமது உரை திரிபுபடுத்தப் பட்டுள்ளதாகவும் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

## சமாதான நீதிவான் தனிமைப்படுத்தல்

வவுனியா,ஒக்.07

கூமாங்குளம் பகுதியில் வசித்துவரும் சமாதான நீதிவான் ஒருவர் நேற்றுக் காலை பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அவரது வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

இந்த சமாதான நீதிவான் வவுனியாபழைய பஸ் நிலையத்தில் சமாதான நீதிவனாகக் கடமையாற்றி வருகின்றார்.

இந்நிலையில் அவரிடம் ஒப்பம் பெற்றுக்கொள்வதற்காக கொரோனாநோய் தொற்றுக்குள்ளான தொற்றாளர் ஒருவர் வந்துசென்றமை உறுதிப்படுத்தப் பட்டதையடுத்துஅவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

## யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் கிருமி நீக்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.07

யாழ்ப்பாண பொலிஸாரால் யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகரப் பகுதி மற்றும் மத்திய பஸ் நிலையம், தனியார் பஸ் தரிப்பிடம்,யாழ் நகர வர்த்தக நிலையங்களுக்கு கிருமித் தொற்று நீக்கிவிசிறும் பணி முன்னெடுக்கப்பட்டது.

புங்குடுதீவுபகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொரோனா உறுதியாகியுள்ள நிலையில் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் கிருமி நீக்கும் நடவடிக்கை நேற்று இடம் பெற்றது.

சுகாதாரதர பினருடன், யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் மாநகரசபையினர் இணைந்து இந்த கிருமிநீக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

## கம்பஹா தொற்று: வவுனியாவில் குடும்பம் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக் 07

கம்பஹா தொற்றாளருடன் தொடர்பு கண்டறியப்பட்ட நிலையில் வவுனியா தோணிக்கல் பகுதியில் குடும்பம் ஒன்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல் ஆலடிப் பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றை அண்மையில் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்ணொருவர் சந்தித்துச் சென்றுள்ளார்.

அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அந்தக் குடும்பம் வவுனியாவில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது.

தோணிக்கல் ஆலடிப் பகுதியில் ரயில் கடவைக்கு அருகாமையில்சிறிய கடையொன்றை நடத்தி வரும் குடும்பமொன்றே இவ்வாறு தனிமைப்படுத்தப் பட்டுள்ளது.

## கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 25 மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள்

கிளிநொச்சி,ஒக்.07

கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 25 மீனவர்களுக்கு ஒரு லட்சத்து 92ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன் தினம் பிற்பகல் பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்றது.

சுவிஸ் நாட்டிலுள்ள ஈழத்தமிழர் ஒன்றியத்தின் நிதி பங்களிப்புடன் இந்த வலைகள் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் வழங்கப்பட்டன.

வன்னி பிராந்திய கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை எஸ்.செபஜீவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பூநகரிப் பங்குத் தந்தைஅருட்திரு ஜெயக்குமாரும் கலந்துகொண்டார்.

## யாழ்.பல்கலையில் கொரோனா முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.07

நாட்டில் எழுந்துள்ள கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக யாழ். பல்கலைக் கழகம் ஸ்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

நாட்டில் எழுந்துள்ள கொரோனா அச்சுறுத்தலையடுத்து, யாழ். பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாலை, துணைவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பதிவாளர், அனைத்துப் பீடங்களினதும் பீடாதிபதிகள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் உட்படபலர் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனைகளை நெறிப்படுத்தும் வகையிலும், பீடாதிபதிகளை ஒருங்கிணைக்கும் வகையிலும், யாழ்.பல் கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத் துறையைச் சேர்ந்த மருத்துவர் எஸ். சுரேந்திரகுமாரன் செயற்படவுள்ளார் என்று துணைவேந்தர் கூறினார்.

செய்திகள்

# புகையிலை நாற்றுமேடைகள் அமைத்துவரும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஒக் 07
வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைப் பயிர்ச்செய்கைக் காக நாற்று மேடைகள் அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பொலிகண்டி, மந்திகை, புலோலி, கம்பர்மலை, அல்வாய் ஆகிய இடங்களில் புகையிலை நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் பொலிகண் டிப் பகுதியில் பல்லாயிரக்கணக் கான நாற்றுக்களைப் பெறக் கூடியவாறு நாற்று மேடைகள் அமைக்கப்படுகின்றன.

வடமராட்சிக்கு வெளியே குடாநாட்டிலுள்ள வலிகாமம், தீவகம், தென்மராட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் தமக்குத் தேவையான புகையிலை நாற்றுகளை வடமராட்சியில் பெற்று வருவது வழமையாகும்.

குடாநாட்டில் புகையிலை நடுகைப்பணி அடுத்த மாதம் பிற்பகுதி முதல் டிசெம்பர் மாதம் வரை நடைபெறும்.

# சுகாதார விதிகளுக்கமைய எம்.பிக்கள் நடக்கவேண்டும்

## சபாநாயகர் வலியுறுத்தல்



கொழும்பு, ஒக் 07
நாட்டில் மீண்டும் அதிகரித் துள்ள கொரோனா தொற்றுக்கு மத்தியில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் சுகாதாரப் பாதுகாப்பு விதிகளுக்கு அமைய நடந்துகொள்ள வேண்டுமெனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டபோது விடுத்த விசேட அறிவிப்பின் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

இதற்கமைய பாராளுமன்றத் துக்கு வரும்போதும் பாராளு மன்றத்தில் இருக்கும்போதும் சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள வழிகாட் டல்களைக் கடுமையாகப் பின்பற்றுமாறும் அவர் எம். பிக்களுக்கு அறி வுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்துக்கு வெளியே செயற்படும்போதும் அவற்றைப் பின்பற்றுமாறும் சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுள் ளார்.

விருந்தினர்களைப் பாராளுமன்றத்துக்கு அழைப் பதைத் தவிர்த்துக்கொள்ளு மாறும் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய அத்தியாவசியமான அரச அதி காரிகளை மாத்திரம் பாராளு மன்றத்துக்கு அழைக்குமாறும் சகல அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களி டம் கோரிக்கை விடுப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக பாராளுமன்றப் பணியாட்கள் தொகுதியினர், ஒன்றிணைந்த சேவைப் பணியாளர்கள், பாராளு மன்ற ஊடகவியலாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் உட்பட பாராளுமன்றத்துக்கு வரும் சகலரும் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய நடந்துகொள்வது அத்தியாவ சியமானது என்றும் சபாநாய கர் தனது அறிவிப்பில் தெரிவித்தார்.

# கிழக்கு பல்கலை மாணவர்கள் 61 பேர் சுய தனிமைப்படுத்தல்

மட்டக்களப்பு, ஒக் 07
மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 61 பேர் சுய தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர் எனப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆர். ராகல் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத் தில் விடுமுறையில் வீடுசென்று திரும்பிய கம்பஹா மாவட் டத்தைச் சேர்ந்த 61 மாண வர்கள் மட்டக்களப்பில் உள்ள பல்கலைக்கழக விடுதியில் நேற்று முன்தினம் முதல் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கான பி. சி.ஆர் பரிசோதனை நடத்தப் பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கூறினார்.

நாட்டில் தற்போது கொரோனா தொற்று உள்ள பிரதேசமாக கம்பஹா மாவட்டம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனை யிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தற்போது விடுமுறையில் வீடு சென்று திரும்பிய கம்பஹா மாவட்டத் தைச் சேர்ந்த 61 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதில் மருத்துவ பீடத்தில் கல்வி கற்றுவரும் 16 மாணவர் கள் மட்டக்களப்பு பார் வீதியிலுள்ள பல்கலைக்கழக விடுதியிலும் ஏனைய 45 மாண வர்கள் வந்தாறுமூலையிலுள்ள பல்கலைக்கழக விடுதியிலும் சுய தனிமைப்படுத்தப்பட் டுள்ளதுடன் அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டுள்ளோம் என அவர் மேலும் கூறினார்.

# புங்குடுதீவு பெண்ணுடன் பஸ்ஸில் பயணித்த 15 பேரே அடையாளம்!

## ஏனையோரையும் தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக் 07

**“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புங்குடுதீவுப் பிரதேசத்தை வதிவிடமாக கொண்ட மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய இளம் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவருடன் பஸ்ஸில் பயணித்த 15 பேர் தொடர்பு கொண்டு தம்மை பாதுகாத்துக் கொண்டுள்ளனர்.”**



-இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஏனையவர்களும் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கத்துடன் அல்லது பிரதேசத்தில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பெண் கடந்த 3ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இருந்து ரண்சிலு (Ransilu) என்னும் என்.பி 6503 இலக்கமுடைய தனியார் பஸ் ஸில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துள்ளார்.

அந்த பஸ் புத்தளத்தில் பழுதடைந்த பின்னர் கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி வருகை தந்த பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சபை சாலைக்குச் சொந்தமான என்.பி 9776 இலக்க பஸ்ஸில் புத்தளத்திலிருந்து நள்ளிரவு 12.30 மணியளவில் புறப்பட்டு கொடிகாமத்தை 4ஆம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு வந்தடைந்துள்ளார்.


அதன் பின்னர் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இன்னொரு தனியார் பஸ்ஸில் பயணம் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து காலை 6.20 மணிக்கு என்.பி 6508 இலக்க தனியார் பஸ்ஸில் புங்குடுதீவுக்குப் பயணித்துள்ளார்.

மேற்படி பஸ்களில் இவருடன் பயணித்தவர்கள் வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்பிலுள்ள 0212226666 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டு உங்களது விவரங்களை அறியத்தரவும்.

இதன் மூலம் தங்களையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டிய அவசர சேவைகளை எம்மால் வழங்க முடியும். இந்நோய் எமது மாகாணத்தில் பரவாதிருக்க எமக்குத் தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவும்- என்றார்.

# ரணில் நேற்று வாக்குமூலம்



கொழும்பு, ஒக் 07
முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க , ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று வாக்குமூலம் வழங்கினார்.

வாக்குமூலமளிக்க வருமாறு அவருக்கு கடந்த 22ஆம் திகதி ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி நேற்று முன்னிலையான ரணில் விக்கிரமசிங்க ஒன்றரை மணித்தியாலம் வாக்குமூலம் வழங்கினார்.

அவரை எதிர்வரும் 13ஆம் திகதி ஆணைக்குழுவில் மீண்டும் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுப்போக்குவரத்தில் அவதானமாக இருங்கள்

கொழும்பு, ஒக் 07
பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும்போது சுகாதார ஆலோசனைகளுக்கமைய செயற்படுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முகக்கவசமில்லாத பயணிகளை பஸ்களில் ஏற்றவேண்டாம் என அனைத்து பஸ் ஊழியர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றாத பஸ்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, பஸ்களில் கிருமி ஒழிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா கூறியுள்ளார்.

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது

கொழும்பு, ஒக் 07
கஹதுடுவ-ஹெரலியாவல பகுதியில் ரி-56 ரக துப்பாக்கி களுடன் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடம் இருந்து 4 ரி-56 ரக துப்பாக்கிகள், 2 மகசின்கள் ஆகியன பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அண்மையில் பொலிஸா ருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த, திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட ரத்ம லானை ரொஹாவுக்குச் சொந்தமான ஆயுதங் களே இவ்வாறு கைப்பற் றப்பட்டுள்ளன.

இரத்மலானை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்கள், பழைய பத்திரிகைகளை சேகரிக் கும் இருவரால் கஹதுடுவ, ஹெரலியாவல பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள தாக பொலிஸ் விசேட அதிரடிப் படை தெரிவித் துள்ளது.

சம்பவம் தொடர்பில் 38 மற்றும் 49 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

செய்திகள்

## வவுனியாவில் ஒலிபெருக்கி மூலம் பொலிஸார் வழங்கும் எச்சரிக்கை

வவுனியா,ஒக்.07

நாட்டில் கொரோனா தாக்கம் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் வவுனியா பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு விசேட அறிவுறுத்தல்களை நேற்று வழங்கினர்.

கம்பஹாஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணிய நிலையில் வவுனியாவிலும் சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே கொரோனா தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துகொள்ளும் வகையிலான சுகாதார நடைமுறைகளை மக்கள் கட்டாயம் பேணவேண்டும் எனப்பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துவருகின்றனர்.

அத்துடன் சுயதனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளவர்களுடன் தனிமைப்படுத்தல் காலத்தில் நேரடி தொடர்புகளைப் பேண வேண்டாம் எனவும் கோரப் பட்டுள்ளது.

# ஆடை தொழிற்சாலை ஊழியர்கள் வெளியில் நடமாட உடனடித் தடை

## அரச தகவல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.07

**மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் வெளியில் நடமாடவேண்டாம் என அரசுகேட்டுக் கொண்டுள்ளது.**

மேலும்,அவர்கள் அனைவரும் தங்களது வீடுகளில் சுய தனிமைப் படுத்தலை மேற்கொள்ளுமாறும் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்பஹா பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று மாலை 6.00 முதல் மறு அறிவித்தல் வரைபொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப் படவுள்ளதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் வேகமாக அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முன்னதாக கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய, வெயாங்கொட பொலிஸ் பிரிவுகளில் உள்ள பகுதிகளுக்கு பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் இரண்டு தொற்றாளர்கள்

கொழும்பு,ஒக்.07

கம்பஹாஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி விடுமுறை பெற்று அம்பாறைப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு வந்த இருவர் கொரோனா தொற்றாளர்கள் என அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர் எனகல் முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: -

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக் குட்பட்ட பிரதேசங்களில் பொதுமக்கள் முகக்கவசம், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மீறுபவர்களுக்கெதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

நாட்டில் தற்போது கொரோனாவைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் பொதுப் போக்குவரத்துகளில் பயணிக்கும் மக்கள் சமூக இடைவெளியைப் பேணி முகக் கவசம் அணிந்துசெல்ல வேண்டும்.

தற்போது கல்முனை பிராந்தியத்தில் வெளிநாடுகளில் இருந்து வருகைதந்த 32 பேர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

இவர்களின் வீடுகளுக்கு யாரும் செல்லவேண்டாம். சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வெளியில் செல்ல வேண்டாம். இதனை உதாசீனம் செய்பவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் ஒன்றுகூடும் சந்தைகள், வணக்கஸ் தலங்கள் ஆகிவற்றில் சுகாதார நடைமுறைகளைப் பேணவேண்டும் - என்றார்.

## முகக்கவசம் அணியாதோருக்கு இராணுவத்தினர் எச்சரிக்கை!

அம்பாறை,ஒக். 07

முகக்கவசம் அணியமறுப்போர் யாராக இருந்தாலும் அவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவர்கள்என்று இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர்.

அம்பாறை, கல்முனை,சவளக்கடை,சம்மாந்துறை,மத்திய முகாம்,அக்கரைப்பற்றுபொலிஸ் பிரிவில் நேற்றுக் காலைமுதல் வீதியால் வருவோர், இடைநிறுத்தப்பட்டு முகக்கவசம் அணிந்துசெல்லுமாறு இராணுவத்தினரால் அறிவுறுத் தப்பட்டனர்.

இவ்வாறு முகக்கவசம் அணியாது செல்பவர்கள் அடையாளம் காணப்பட்டு, சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டுபாதசாரிகள், வாகனஉரிமையாளர்கள், பஸ்களில் பயணிப்பவர்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடிக்கவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பாகவைத்தியசாலை,வங்கிகள்,அரச திணைக்களங்கள், பஸ் நிலையங்கள் உள்ளிட்ட பொதுநிறுவனங்களில் தேவை நிமிர்த்தம் செல்லும் பொது மக்கள், முகக்கவசங்களை அணிந்து செல்லுமாறு இராணுவத்தினர் கோரியுள்ளனர்.

## லஞ்சம் வாங்கிய பொலிஸ் அதிகாரிகைது

கொழும்பு,ஒக்.07

பண்டாரவளை விசேட விசாரணைப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர், இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் நேற்று கைது செய்யப்பட்டார்.

வெலிமடை நீதிவான் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து,நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றின் போது முறைப்பாட்டாளரிடம், மூன்று இலட்சம் ரூபாவை இலஞ்சமாகபெற்றபோதே இவர் கைது செய்யப்பட்டார்.

## மூதாட்டியின் சங்கிலியை அறுத்த சகோதரர்கள் கைது

வவுனியா,ஒக்.07

வவுனியா சமயபுரம் பகுதியில் மூதாட்டியின் சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டில் சகோதரர்களை வவுனியா பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

சமயபுரம் பகுதியில் சிறிய கடை ஒன்றை நடத்தி வந்த மூதாட்டியிடம் சென்ற இரு இளைஞர்கள் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மூதாட்டி வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு மேற்கொண்டார். இதனை யடுத்து விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதி காரி சுனில் சாந்ததலமை யிலான பொலிஸ்குழுவினர் மகா றம்பைக் குளம் பகுதியைச் சேர்ந்த 20,22 ஆகிய வயதுடைய சகோதரர் களைக் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் மூதாட்டியின் சங்கிலியும் மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களையும் வவுனியா மாவட்டநீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையை பொலிஸார் முன் னெடுத்துள்ளனர்.

## கிளிநொச்சியில் 4 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

கிளிநொச்சி,ஒக்.07

கிளிநொச்சியில் நான்கு குடும் பங்கள் சுய தனிமைப்படுத் தலில் உள்ளனர்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற் றும் இரண்டு சகோதரிகளின் குடும்பமும், மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள பிறிதொரு ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் யுவதி ஒருவரின் குடும்பமும், புங்குடுதீவில் கொரோனா தொற்றுக்கு உள்ளான யுவதியின் திருமணப் பேச்சுக்கு சென்று வந்த இரண்டு குடும்பங்களும் சுய தனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்பட் டுள்ளனர்.



## நுவரெலியாவில் இருந்து மாலைதீவுக்கு மரக்கறி

### துவருடன் ஜீவன் பேச்சு

கொழும்பு,ஒக் 07

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும், இலங்கைக்கான மாலை தீவுத் தூதுவர் உமர் அப்துல் ரசாக்குக்கும் இடையிலான சந்திப்புஅமைச்சில் நடை பெற்றது.

நுவரெலியாமா வட்டத்தில் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து மாலை தீவுக்கு மரக்கறி வகைகளை ஏற்றுமதி செய்தல் மற்றும் இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் திறமை மேம்படுத்துவதற்கான உதவித் திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வது குறித்தும் கவனம் செலுத் தப்பட்டது.

## டக்ளஸின் சகோதரரை திலீபன் கொன்றதற்கு ஆதாரம் உண்டா?

### தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி கேள்வி

யாழ்ப்பாணம்,ஒக் 07

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தம்பியை திலீபன் கொன்றார் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது எனப் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள்கட்சியின்தலைவர்க.இன்பராசா கேள்விஎழுப்பியுள்ளார்.

யாழ். ஊடகஅமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில்கலந்துகொண்டு தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது: -

டக்ளஸ் தேவானந்தாவிடம் நான் ஒருகேள்வியைமுன் வைக்கிறேன்,திலீபன்தான் உங்கள் தம்பியைக் கொலை செய்தார் என்று கூறியிருந்தீர்கள். அதற்கு உங்களிடம் என்னஆதாரம் இருக்கின்றது. கடந்த காலத்தை எடுத்துக் கொண்டோமானால் சிங்கள, முஸ்லீம் மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் ஏற்பட்ட பாதிப்புகளை விடஉங்களால், உங்கள் கட்சியால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தான் அதிகம் என்பதைச் சுட்டிக் காட்டவிரும்புகின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா ஒரு அமைச்சராக இருந்து கொண்டே பலகுற்றங்களைச் செய்திருக்கிறார். இப்படியானவர் திலீபன் பற்றி கதைப்பதற்குவெட்கம் இல்லையா? டக்ளஸ் தேவானந்தாவை ஒருமுறை தமிழ் மக்கள் வீட்டுக்கு அனுப்பியிருந்தால் இன்று திலீபன் பற்றிஅவர் கதைத் திருக்கமாட்டார் - என்றார்.

உலகச் செய்திகள்




# இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு அறிவிப்பு

ஒஸ்லோ, ஒக். 07

2020 ஆம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு கருந்துளை - விண்மீன் திரள் பற்றிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய விஞ்ஞானிகள் மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


இதன்படி, ரோஜர் பென்ரோஸ், ரெயின்ஹார்ட் ஜென்சல், அண்ட்ரியா ஹெஸ் ஆகியோருக்கே இந்தப் பரிசு வழங்கப்படவுள்ளது.

பரிசுத் தொகையான ஒரு கோடி சுவிடிஸ் குரோனர் - இலங்கை மதிப்பில் 20.63 கோடி ரூபா மூவருக்கும் பகிரப்படவுள்ளது.

இதில், கருந்துளை உருவாக்கம் குறித்த பொதுவான சார்பியல் கோட்பாட்டின் வலுவான கணிப்பை கண்டறிந்தமைக்காக ரோஜர் பென்ரோஸுக்கு 50 வீத பரிசுத் தொகையும், விண்மீன் திரளின் மையப்பகுதியில் உள்ள அதிசய சிறுபொருளை கண்டறிந்தமைக்காக ரெயின் ஹார்ட் ஜென்சல், அண்ட்ரியா ஹெஸ் தலா 25 வீதமும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தின ம் மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீண்டும் வந்தது தஸ்மானியன் டெவில்



சிட்னி, ஒக். 06

அவுஸ்திரேலியாவில் அழிவின் விளிம்பில் இருந்த 'தஸ்மானியன் டெவில்' என்ற விலங்கு, இனப்பெருக்கம் செய்யப்பட்டு மீண்டும் தேசிய பூங்காவுக்கு பார்வையாளர்கள் காண அனுமதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு என்று பலரும் பாராட்டி உள்ளனர்.


அவுஸ்திரேலியாவின் தஸ்மானியா தீவில் மட்டும் காணப்பட்ட இந்த விலங்கு காணப்பட்டது.

கரியநிறமும், கூரிய பற்களும், இறந்த உடல்களை தின்னும் வழக்கமும் உள்ளது. பயம் ஏற்படும் அளவுக்கு தஸ்மானியன் டெவில் அலறும். அதனாலேயே இதற்கு 'டெவில்' என்று பெயர் வைத்துள்ளனர். ஆனால், வளைகளில் வாழும் இந்த விலங்கு, இறந்த உடல்களை தின்பதன் மூலம், சுற்றுச்சூழலை மிகவும் பாதுகாத்து வந்தது.

இந்த விலங்கு அவுஸ்திரேலியாவில மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அதிக எண்ணிக்கையில் இருந்துள்ளது. ஆனால், படிப்படியாக இதன் எண்ணிக்கை குறைந்து, ஒன்றரை லட்சம் அளவுக்கு வந்துவிட்டது. மேலும், 1990 ஆம் ஆண்டுகளில் அரிய வகை முகப் புற்றுநோய் இந்த விலங்குகளை தாக்கியதில், அழிவின் விளிம்பு நிலைக்கு சென்றன. இந்த விலங்கின் முகத்தில் பெரிய கட்டிகள் வந்து இறந்துள்ளன.

இந்நிலையில், இந்த இனத்தைப் பாதுகாக்கவும் அதிகரிக்கவும், 'ஆஸி ஆர்க்' என்ற அமைப்பு திட்டத்தை கையில் எடுத்தது. இதன்படி, இந்த அமைப்பு மற்ற வனவிலங்கு பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்து தஸ்மானியன் டெவில் விலங்குகளை இனப்பெருக்கம் செய்து 400 ஹெக்ரெயர் பரப்பில் விட்டுள்ளது. (ஐ)

# 58% பெண்களுக்கு பாலியல் இம்சை




புதுடில்லி,ஒக.7

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இளம் பெண்களில் 58 வீதமானோர் பாலியல் தொல்லைகளை சந்திக்கின்றனர் என்று தனியார் நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

"சிறுமிகளுக்கான உரிமைகள் மற்றும் சமத்துவத்திற்காக இந்தியாவில் செயல்படும் தனியார் தொண்டு நிறுவனமான "பிளான் இன்ரர்நஷனல்", சர்வதேச சிறுமிகள் தினத்தை முன்னிட்டு நடத்திய கணக்கெடுப்பிலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில், அமெரிக்கா, பிரேஸில், இந்தியா, நைஜீரியா, ஸ்பெயின், தாய்லாந்து உட்பட 22 நாடுகளில் உள்ள 15 முதல் 25 வயதுடைய 14 ஆயிரம் இளம் பெண்கள் கலந்து கொண்டு வாக்களித்தனர்.

பேஸ்புக் மூலம் 39 வீதத்தினரும், இன்ஸ்ட்ராகிராமில் 23 வீதத்தினரும், வட்ஸ் அப் மூலமாக 14 வீதத்தினரும், ஸ்னாப்சொட் 10 வீதம், ருவிட்டர் 9 வீதம், டிக்ரோலில் 6 வீத பெண்களும் பாலியல் தொந்தரவுகளை எதிர்கொள்கின்றனர்.

இத்தகைய தொந்தரவுகள் தாங்க முடியாமல் இளம் பெண்களில் ஐந்தில் ஒருவர் சமூக ஊடகங்களில் இருந்து வெளியேறியுள்ளனர். அல்லது பயன்படுத்துவதை நிறுத்தியுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சமூகவலைத் தளங்களில் தொடரும் பாலியல் தொந்தரவுகளுக்கு எதிராக குறித்த நிறுவனங்களுக்கு கடிதம் எழுதி அதற்கு எதிராகப் போராடப் பெண்கள் முன்வர வேண்டும் என்று பிளான் இன்ரர்நஷனல் அமைப்பின் தலைமை நிர்வாகி அன்னி பிரகிட் அல்பிரெக்சன் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

# உலகில் 76 கோடி மக்கள் கொரோனாவால் பாதிப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் சொல்கிறது

ஜெனிவா, ஒக். 07

உலக மக்கள் தொகையில் 76 கோடி பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

உலகை அச்சுறுத்துதும் கொரோனா தொற்றுக்கு மூன்றரை கோடி பேருக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஆனால், கொரோனாவுக்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் பலியானவர்களின் எண்ணிக்கையும் தற்போது வெளியானதையும்விட அதிகம் என்று தெரிவிரிக்கப்படுகின்றது. பல நாடுகளில் கொரோனா வைரஸ் பாதிப்பு பற்றி சரியாகக் கணக்கெடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் உலக மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் அவசர நிலை பிரிவு தலைவர் மைக்கேல் ரியான் கூறுகையில்: -

"கிராமம் முதல் நகர் புறம் வரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் உள்ளன. உலகில் பெரும் பகுதிகள் அபாயத்தில் இருப்பதே இதன் அர்த்தம். கொரோனா தொற்று தொடர்ந்து விரிவடையும் ஆனாலும் அந்த தொற்றின் பரவலை கட்டுப்படுத்தவும் உயிர்களை காக்கவும் பல வழிகள் உள்ளன.

இதுவரை பல உயிரிழப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளன. மேலும் பல உயிர்களை காப்பாற்ற முடியும். தற்போதைய மதிப்பீட்டின் படி உலக மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் தொற்றால் பாதிக்கப்பட்டு இருக்கலாம். உலகின் பல்வேறு பகுதிகளில் பரவல் அதிகரித்து வருகிறது. தெற்காசியாவில் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது", என்றார். (ஐ)



# வெள்ளை மாளிகைக்கு திரும்பினார் ட்ரம்ப்

## முகக்கவசத்தையும் துறந்தார்

வாஷிங்டன், ஒக். 07

கொரோனா தொற்றால் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று வெள்ளை மாளிகைக்கு திரும்பினார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரும் நவம்பர் மூன்றாம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் அவரின் மனைவியும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டமை கடந்த முதலாம் திகதி உறுதி செய்யப்பட்டது.

அவரின் உடல்நிலை மோசமானமையால் கடந்த இரண்டாம் திகதி இராணுவ மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கு நான்கு நாட்கள் சிகிச்சை பெற்ற ட்ரம்ப் நேற்று ஹெலிகொப்டர் மூலம் வெள்ளை மாளிகைக்கு திரும்பினார்.

இதுகுறித்து அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்தவை வருமாறு, "நான் உண்மையிலேயே நன்றாக இருக்கிறேன். கொரோனாவுக்கு யாரும் அச்சப்படத் தேவையில்லை. அது உங்களை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காதீர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெள்ளை மாளிகைக்கு திரும்பியதும் டொனால்ட் ட்ரம்ப் முகக்கவசம் அணிவதைத் தவிர்த்து விட்டார். (ஐ)

# காற்றின் வழியாகவும் கொரோனா பரவலாம்!

## அமெரிக்கா மீளவும் எச்சரிக்கை

நியூயோர்க், ஒக். 07

கொரோனா வைரஸ் தொற்று காற்றின் மூலமாகவும் பரவலாம் என்று அமெரிக்க நோய் தடுப்பு மையம் எச்சரித்துள்ளது.

இந்த அமைப்பு முன்னர் இதே கருத்தை வெளியிட்டிருந்தது. எனினும் பின்னர் நடந்த ஆய்வுகளால் அது மீளப்பெறப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்க நோய் தடுப்பு மையம் வெளியிட்ட புதிய தகவலில் சமூக இடைவெளியை சரியாக பின்பற்றிய நபர்களுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களால், கொரோனா வைரஸ் தொற்று காற்றாலும் பரவ வாய்ப் புள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)



செய்திகள்

# கொரோனாவை ஒழிக்க அரசுக்கு பூரண ஆதரவு

## எதிர்க்கட்சி அறிவிப்பு

**கொழும்பு,ஒக்.07**

**''கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த, அரசாங்கம் முன்னெடுத்துவரும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும், பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில்,பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்'', என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க அறிவித்துள்ளார்.**



கொழும்பில், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'கொரோனா வைரஸ் பரவலை அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளது என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால், தற்போது சமூகப் பரவல் ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த, அரசாங்கம் எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் பூரண ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்போம்.

நாட்டு மக்களைச் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடித்து வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பாக, இருக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது, அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரே மாதத்திற்குள் நாட்டின் பொருளாதாரம் மறை பெறுமானத்தைப் பெற்றிருந்தது. இது கொரோனா வைரஸ் பரவலுக்கும் முன்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியாகும். அரசாங்கத்தின் முறையற்ற வரிக்குறைப்பின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. வைரஸ் பரவலின் பின்னர் இந்த நிலைமை மேலும் அதிகரித்தது. தற்போது நாட்டு மக்கள் இரு வேளை உணவுகளைப் பெற்றுக் கொள்ளவே முடியாமல் உள்ளனர்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், வைரஸ் பரவல் காரணமாக பலரது தொழில்வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

இந்நிலையில், தற்போது அத்தியாவசிய பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. அதற்கமைய போதிய வருமானமின்றி பொருட்களின் விலையும் அதிகரித்துள்ள நிலையில், மக்கள் எவ்வாறு உயிர்வாழ்வார்கள்? அரசி மற்றும் தேங்காய் விலைகள் ஒருகாலத்தில் அதிகரித்தாலும், இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் அதனை முறையாக கையாண்டிருந்தன. ஆனால், தற்போதைய அரசாங்கத்துக்கு அதனைக் கையாளத் தெரியவில்லை" - என்றார். (எ)

# சிறுவர் துஷ்பிரயோகம் 6,063 முறைப்பாடுகள்

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,ஒக்.07

இந்த வருடத்தில் செப்ரெம்பர் மாதம் வரை 6ஆயிரத்து 63, சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில், 3 ஆயிரத்து 900 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை நிறைவடைந்துள்ளது. 330 முறைப்பாடுகளுக்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் ஜி,எல்.பீரிஸ் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹரினி பாலசூரிய, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் குறித்து வினவியபோது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

'2020ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 23ஆம் திகதி வரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 6ஆயிரத்து 63 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அம்முறைப்பாடுகளில் 3ஆயிரத்து 900 விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளன. விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளில் 330 முறைப்பாடுகளுக்கு குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு பார்க்கையில் இது போதுமானதாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

அதனால், விசாரணை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த, 9 மாகாணங்களுக்கும் 9 சிறுவர் நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

தற்போது, பத்தரமுல்ல மற்றும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே சிறுவர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளை விசாரணை செய்யும் பொலிஸாருக்கு முறையான பயிற்சி வழங்கவும், பொலிஸ் நிலையங்களுக்கு வரும் முறைப்பாடுகளில் ஆரம்ப விசாரணையை 24 மணி நேரத்தில் விசாரித்து, அதிகாரசபைக்கு அறிக்கையிடவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்"- என்றார். (எ)



# 100 மதுபான போத்தல்களுடன் சாவகச்சேரியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.07

மோட்டார் சைக்கிளில், 100 மதுபான போத்தல்களை எடுத்துச் சென்ற நபர் ஒருவர் சாவகச்சேரியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொரோனா தொற்று மூன்றாவது அலை பரவல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், மக்கள் அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந்நிலையில், மதுபானசாலைகளை பூட்டுவதற்கு சாத்தியக் கூறுகள் காணப்படுவதால், வீட்டில் வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் 180 மில்லி லீற்றர் கொள்ளளவு உடைய 100 மதுபான போத்தல்களை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய சாரதா வீதிப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் இந்த நபரை முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# தாக்குதலுடன் தொடர்பு: சாரா உயிருடன் தகவல் வழங்கியவருக்கு அச்சுறுத்தல்!

அம்பாறை,ஒக்.07

சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் சாரா என்ற புலஸ்தினி உயிருடன் இருக்கிறார். அவரை கண்டதாக, தகவல் வழங்கிய நபருக்கு இனந்தெரியாத நபர்கள் அச்சுறுத்தல் விடுக்கின்றனர் என, கல்முனை நீதிமன்ற நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்று கூறப்படும் 16 பேரின் உடற் பாகங்களையும், குடும்ப உறுப்பினர்களின் மரபணு பரிசோதனை அறிக்கைகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்ததில், சந்தேகத்திற்கிடமாக தேடப்படும் சாரா எனப்படும் புலஸ்தினியின் மரபணு பரிசோதனை அறிக்கை, பொருந்தவில்லை என மன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அவர் தப்பிச் சென்றுவிட்டார் எனக் கூறப்பட்டது.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு விசாரணையைத் தொடர்ந்து, தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்று சில தினங்களுக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் எல்லைக்குட்பட்ட புறநகர்ப் பகுதியில் சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினியைக் கண்டதாக 43 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர், பாதுகாப்புத் தரப்பினரிடம் தகவல் ஒன்றை வழங்கியிருந்தார்.

இவ்வாறு, தகவல் வழங்கிய இந்த நபருக்கு தற்போது இனந்தெரியாதோரால் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சட்டத்தரணி ஒருவர் ஊடாக, கடந்த திங்கட்கிழமை, கல்முனை நீதிமன்ற நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் அவர், மூடிய அறையில் வாக்குமூலம் ஒன்றை வழங்கியிருந்தார்.

இதற்கமைய இந்த விடயத்தை விசாரணை செய்த நீதிவான், மேலதிக நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்காக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

இதேவேளை, சஹ்ரான் ஹாசிமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் எனக் குற்றம்சாட்டப்பட்ட 12 சந்தேக நபர்களை மீண்டும் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கல்முனை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிமன்ற நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, காணொலி (வீடியோ கான்பிரன்ஸ்) மூலம் சந்தேகநபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த 12 சந்தேக நபர்களையும், மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த விசாரணையின்போது மேலதிக அறிக்கைகள் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டு, மீண்டும் சந்தேகநபர்கள் விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர்ப் பகுதியில் வைத்து கடந்த வருடம் இந்த 12 சந்தேக நபர்களும் கைதாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

செய்திகள்

# பக்கச்சார்பு, இன, மத அடிப்படையில் அரச அதிகாரிகள் செயல்பட முடியாது

## இராஜாங்க அமைச்சர் விதுர

கொழும்பு,ஒக்.07

**“அரசாங்கத்தின் எந்தவொரு திணைக்களமோ, அரச அதிகாரிகளோ இன, மத அடிப்படையில், பக்கச்சார்பாக செயற்படுவதை ஒருபோதும், அனுமதிக்க முடியாது”, இவ்வாறு கூறினார் புத்தசாசன மற்றும் கலாசார இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க.**



பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், “வட மாகாண தொல்பொருள் திணைக்களத்தினர் இன,மத ரீதியாகச் செயற்படுகின்றனர். கூட்டங்களில் பங்கேற்க அவர்கள் மறுக்கின்றனர்.

தமிழர்களின் கலாசாரங்களை சிங்கள, பௌத்தர்களின் கலாசாரமாக மாற்றும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்”, இது தொடர்பில், எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“எமது அமைச்சின் கீழ் தொல்பொருள் திணைக்களம் இல்லை. அது ஜனாதிபதியின் பாதுகாப்பு அமைச்சுக்கு கீழேயே உள்ளது. எனினும் அரச திணைக்களமொன்று இன,மத ரீதியாகச் செயற்பட முடியாது. அதனை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

மன்னார் தாழ்வுப்பாடு பிரதேசத்திலுள்ள யுத்தத்தால் சேதமடைந்துள்ள கலாசார நிலையத்தைப் புனரமைக்க 2018 ஆம் ஆண்டு, 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதும், அந்த நிலையம் அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்பதால் பணியை முன்னெடுக்க முடியாதுள்ளது”- என்றார்.

இதன்போது சாள்ஸ் நிர்மலநாதன்:- “காணியின் உறுதிப்பத்திரம், கலாசார நிலையத்தின் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது” எனக்கூறியபோது, இராஜாங்க அமைச்சர்:- “அரசின் புதிய சுற்று நிருபமொன்றின் படி, எதிர்வரும் 3 வருடங்களுக்கு அரசால் புதிய கட்டடங்கள் எதுவும் கட்ட முடியாது. எனினும், நீங்கள் எனது அமைச்சுக்கு வாருங்கள். இது தொடர்பில் மாற்றுவழி ஒன்றைத் தேடுவோம்” - என்றார். (எ)

# தூர பிரதேச பயணிகளுக்கான விசேட அறிவிப்பு

கொழும்பு,ஒக்.07

தனிமைப்படுத்தல், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் ஊடாக தூர பிரதேச பேருந்துகள் பயணிக்க முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும், இந்தப் பிரதேசங்களில் பேருந்தை நிறுத்துதல், பயணிகளை இறக்குதல் அல்லது ஏற்றுதல் இடம் பெறக்கூடாது என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த பிரதேசங்களின் ஊடாக ரயில்களும் பயணிக்க முடியும் என்ற போதும் அப்பிரதேசங்களில் புகையிரதங்களை நிறுத்துதல், ரயில்களை இறக்குதல் அல்லது ஏற்றுதல் இடம் பெறக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொதுமக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்குத் தடை!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஒக்.07

நாட்டில், மறுஅறிவித்தல் வரை பொதுமக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு, நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதன்படி, கண்காட்சிகள், கருத்தரங் குகள், விருந்துபசாரங்கள், உட்புற மற்றும் வெளிப்புற நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் மதம் சார்ந்த ஊர்வலங்கள் உட்பட அனைத்து விதமான ஊர்வ லங்களுக்கும், இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, திவுலபிட்டிய, மினு வாங்கொட மற்றும் வெயாங்கொட ஆகிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள தொழில் சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் தாம் தங்கியுள்ள இருப்பிடங்களிலேயே தொடர்ந்தும் இருக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தொழில்சாலைகளின் நிர்வாகம் தமது ஊழியர்களை அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பும், செயல் பாட்டை தவிர்க்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதேபோன்று, பெரண்டிக்ஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனை வரும், இலங்கையின் எந்தப் பிரதேசத்தில் வசித்தாலும் தத்தமது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, தற்போது கொவிட் - 19 தொற்றுக்குள்ளான நபர்களின் குடும்ப உறுப்பினர்களை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தும் மத்திய நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த நபர்கள் அனைவரும், தனிமைப்படுத்தல் முகாமுக்கு செல்லத் தயாராக வேண்டும் என அரசாங்கம் தொற்றுக்குள்ளான நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை, கம்பஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6 மணி முதல் இவ் வாறு பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னர் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட திவுலபிட் டிய, மினுவாங்கொட மற்றும் வெயாங்கொட பகுதிகளில் தொடர்ந்து, ஊரடங் குச் சட்டம் அமுலில் உள்ளமை குறிப் பிடத்தக்கது. (எ)

# “ஒப்பந்தங்களை மாற்ற முடியாது”



கொழும்பு,ஒக்.07

“திருகோணமலை, சீனன் குடா எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், இருதரப்பு உடன்படிக்கைகளை ஒரு தரப்பினருக்குச் சாதகமாக மாற்றியமைக்க முடியாது. எனினும், இந்தியா பயன்படுத்தும் எண்ணெய்க் குதங்களைத் தவிர்த்து ஏனைய எண்ணெய்க் குதங்களை பெற்றுக்கொள்ள இந்திய அரசாங்கத்துடனும், இந்திய எண்ணெய் நிறுவனத்துடனும் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம்”, என்று அமைச் சர் உதய கம்மன்பில தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில், நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் எதிர்க்கட்சி பாராமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே:- திருகோணமலை, எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவிடமிருந்து மீண்டும் பெற்றுக்கொள்வது குறித்த நகர்வுகள் தொடர்பில், கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும்போது அவர் மேற் கண்டவாறு கூறினார். (எ)

# மக்களுக்கு பயன்தரக் கூடிய ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டதா?

## அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு,ஒக்.07

“தனிநபரின் கையில், அனைத்து அதிகாரங்களும் கிடைக்கப் பெற்றால், அது சர்வாதிகார ஆட்சிக்கான முன்னெடுப்புக்கே வழிவகுக்கும்”, என்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆனந்த லெனரோல் தெரிவித்தார்.

இதேவேளை, “அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு இதுவரையில் நாட்டுக்கும், மக்களுக்கும் பயன் தரக் கூடிய ஏதாவது ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளதா?” என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“தனிநபர் ஒருவர் கையில், அனைத்து அதிகாரங்களும் கிடைக்கப் பெற்றாலே நாட்டின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்று பலரும் கூறிவருகின்றனர். இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நாடுகளே அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் பட்டியலில் இருக்கின்றன. தனிநபர் கையில் அதிகாரங்கள் கிடைக் கப் பெற்ற நாடுகள் சர்வாதிகார செயற் பாடுகளால் பெரிதும் பாதிப்புக்களையே எதிர்நோக்கியுள்ளன.

இந்நிலையில், அரசமைப்பிற்கான 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், இலங்கையும் சர்வா திகார ஆட்சியின் பிரதிபலன்களை அனுபவிக்க வேண்டி ஏற்படும். கடந்த அரசாங்கம் 19ஆவது அரசமைப்பு திருத்தத்தை கொண்டு வந்தது மட்டு மன்றி, நாட்டுக்குப் பயன்தரக் கூடிய பல செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தும், அது தொடர்பில் மக்களுக்குத் தெளிவு படுத்தவில்லை.

அதனால், மக்கள் கடந்த அரசாங்கத் தின் பயன்தரும் செயற்பாடுகள் தொடர்பில் போதிய விளக்கம் பெற்றிருக்கவில்லை. தற்போதைய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு இதுவரையில் நாட்டுக்கும், மக்களுக்கும் பயன்தரக் கூடிய ஏதாவது ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளதா?” அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை தயாரித்தவர்கள் யார் என்பது தெரியாமல் இருந்த போது, ஜனாதிபதி தானே அதனைத் தயாரித்ததாக அறிவித்திருந்தார். இந்தத் திருத்தச் சட்டமூலத்தை அவரே தயாரித்திருந்தால் அது எதிர்காலத்தில் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்று அரசாங்கத்தின் வெற்றிக்காக, உழைத்தவர்களே எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்”-என்றார். (எ)

# மேலும், 7 பேர் பூரண குணம்!

கொழும்பு,ஒக்.07

இலங்கையில், கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும், 7 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதன்படி, இதுவரை 3,266 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்நிலையில், 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

செய்திகள்

# பொதுமக்கள் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை!

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்



**கிளிநொச்சி, ஒக். 07**

**"பொது மக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லை. தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை பேணி வரும் முன் காக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்", என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்: -

"தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். யாழ். பல்கலைகழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் 18 மாணவர்களும், கண்டாவளை வெளிக்கண்டல் இராணுவ முகாமில் மூன்று இராணுவத் தினரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தொற்று ஏற்பட்டுள்ளவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கு மாதிரிகளும் பெறப்பட்டுள்ளன. அதன் முடிவுகள் நாளை (இன்று) தெரியவரும். எனவே, பொது மக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லை. தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாகப் பேணி வரும் முன் காக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்", என்று தெரிவித்தார். (ஐ)

# கடவுச்சீட்டு, விசா பற்றிய தகவல்களை தொலைபேசி, மின்னஞ்சலில் பெறலாம்!

## குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 07

கொரோனா நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிரதான, பிராந்திய அலுவலகங்களுக்கு மக்கள் வருகை தருவது நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த இடை நிறுத்தல் அறிவிப்பை குடிவரவு - குடியகல்வு திணைக்களம் வெளியிட்டுள்ளது.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, அலுவலக நேரங்களில் (மு.ப. 8.00 மணி தொடக்கம் பி.ப. 4.30 வரை) கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்கள் மூலம், அல்லது மின்னஞ்சல் ஊடாக உரிய பிரிவுடன் தொடர்பு கொண்டு, உரிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறும் அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி கடவுச் சீட்டுப் பிரிவின் சேவையை நாடுவோர், 070-710 1060, 070-710 1070 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.

இதேபோன்று குடியுரிமைப் பிரிவை தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் 070-710 1030 என்ற இலக்கத்துடனும், வெளிநாட்டுத் தூதரகப் பிரிவை நாட வேண்டியவர்கள், 011-532 9233, 011-532 9235 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு சேவைகளை - தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விசா பிரிவு சேவையைப் பெற வேண்டியவர்கள், 070-710 1050 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்,
dcvisa@immigration.gov.lk,
acvisa1@immigration.gov.lk,
acvisa2@immigration.gov.lk,
acvisa@immigration.gov.lk
என்ற மின்னஞ்சல்கள் மூலமும் தொடர்பு கொள்ள முடியும்.

துறைமுகப் பிரிவின் சேவையைப் பெற விரும்புவோர், 077-778 2505 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# குளத்தில் மூழ்கி சிறுவன் மரணம்

உறவினர் வீட்டுக்கு சென்ற சிறுவன் குளத்தில் குளித்தபோது நீரில் மூழ்கி மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் கிளிநொச்சி உருத்திரபுரத்தை சேர்ந்த 11 வயதான பாலசுப்பிரமணியம் பானுஜன் என்ற சிறுவனே உயிரிழந்தார்.

பாடசாலை விடுமுறைக்காக வள்ளிபுனத்தில் உள்ள உறவினரின் வீட்டிற்கு சென்றவர், இடைக்கட்டு குளத்தில் குளித்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவருடன் குளிக்கச் சென்ற சிறுவர்கள் கொடுத்த தகவலால், மீட்கப் பட்ட சிறுவன் மூங்கிலாறு பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட உயிரிழந்தார்.

# தேவைப்படின் ரியாத் பதியுதீன் மீண்டும் கைது செய்யப்படுவார்

## பாராளுமன்றில் அமைச்சர் சமல்



கொழும்பு, ஒக். 06

"பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் இப்போது விடுவிக்கப்பட்டாலும்கூட அவர் நிரபராதி என அர்த்தம் கொள்ள வேண்டாம். இந்த தாக்குதலுடன் தொடர்புடைய விசாரணைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. புதிய சாட்சியங்கள் கிடைத்தால், தேவைப்பட்டால் அவர் மீண்டும் கைது செய்யப்படுவார்" என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் நீர்ப்பாசனத்துறை அமைச்சருமான சமல் ராஜபக்ஷ பாராளுமன்றில் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடியபோது, வாய்மூல வினாக்கள் நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாத் பதியூதின் கைது மற்றும் அவரது விடுதலை குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜயசிறி சபையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்தபோதே அமைச்சர் சமல் ராஜபக்ஷ இந்த விடயங்களைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்: -

"ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அரச நிறுவனங்களையும், நியதிச் சட்ட நிறுவனங்களையும் சேர்ந்த 130 ஊழியர்கள் விசாரணைக்கு உற்படுத்தப்பட்டனர். 10 பேர் கைது செய்யப்பட்டனர். எனினும் இந்த விவகாரம் நீதிமன்ற விசாரணையில் உள்ளதால் அது குறித்து ஆழமாகப் பேச முடியாது. எவ்வாறு இருப்பினும் இந்த தாக்குதலுடன் தொடர்புபட்ட, உதவிகளை செய்த நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்", என்றார்.

# கொழும்பு பல்கலைக்கழக மாணவருக்கான அறிவிப்பு

கொழும்பு, ஒக். 07

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் அடுத்த வாரம்வரை பல்கலைக்கழகத்திற்கு வருகை தரவேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முதலாம் மற்றும் மூன்றாம் வருடங்களுக்கான மாணவர்களுக்கான பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று அறிவித்துள்ள கலைப்பீட பீடாதிபதி, பரீட்சை அட்டவணை திட்டமிட்டு மீள அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)


# மரண அறிவித்தல்

## நீக்கலஸ் அமலதாஸ் ரணசிங்கம்



மலர்வு - 1939.11.25
உதிர்வு - 2020.10.04

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கலஸ் அமலதாஸ் ரணசிங்கம் கடந்த (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கஸ்பார் நீக்கலஸ் - அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற யோசப் - அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகராணி அவர்களின் அன்புக் கணவரும் பியாற்றிஸ் சிரோமி (பிரான்ஸ்), டொறின் மாரியற் (கனடா), பிரட்லி சிகான் (பிரான்ஸ்), டெறிக் மேரியஸ் (பிரான்ஸ்), ஜறிஸ் நிலுசா (ஆசிரியை - மாத்தளை ) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கிறிஸ்ரி றெஜினோல்ட் இராஜசிங்கம் (ஜேர்மனி) மற்றும் பெனிக்னா றுக்மணி (பிரான்ஸ்), கில்பேட் ஜெயரட்ணம் (ஜேர்மனி), ஸ்ரெலா இந்திரா, அஞ்சலா பேபி, விக்ரர் ஜெயக்குமார், புளோரன்ஸ் றஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசதுரை, தம்பிஜயா, தம்பிரத்தினம், தங்கராணி, மாதினி, அலோசியஸ் தர்மராஜா, கில்பேட் நீர்றா (ஜேர்மனி) மற்றும் காலஞ்சென்ற மோசஸ் பெனடிக்ற், விக்ரர் றோஸ் - மேரி வசந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கமிலஸ் (பிரான்ஸ்), றொபின்சன் (கனடா), சோபியா (பிரான்ஸ்), றொஸ்னி (பிரான்ஸ்), கஜமுகன் (ஆசிரியர் - மாத்தளை) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோசன், நிதூதன், றுக்ஷி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜோயல், ஜெரமி, ஜோ, சரோண், செறின், கெலன் ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும் கிறிஸ்ரோ, ஜொய்லின், றோமா, கத்தறின், கர்லின், மர்லின், மத்தியு, சஜாணிக்கா, சுவாசிக்கா, சஸ்மிகா, வியாஸ், டிவேனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இன்று (07.10.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல. 182, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
077 2487638, 021 2229366
தகவல்: குடும்பத்தினர்.

ஈழநாடு
Eelanadu

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | நிகர ஓட்டம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 06 | 04 | 02 | + 1.488 | 08 |
| டில்லி கப்பிட்டல்ஸ் | 05 | 04 | 01 | + 1.060 | 08 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 05 | 03 | 02 | - 1.355 | 06 |
| கொல்கத்தா நைற்ரைடர்ஸ் | 04 | 02 | 02 | - 0.121 | 04 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 05 | 02 | 03 | - 0.342 | 04 |
| ஹைதராபாத் சன்ரைசர்ஸ் | 05 | 02 | 03 | - 0.417 | 04 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 05 | 02 | 03 | - 0.826 | 04 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 05 | 01 | 04 | + 0.178 | 02 |

DREAM11 IPL

## இன்றைய ஆட்டம்

கொல்கத்தா நைற்ரைடர்ஸ் **எதிர்** சென்னை சுப்பர் கிங்ஸ்

**மைதானம் : அபுதாபி**
நேரம் : இரவு 7.30 (இலங்கை)



# கிவிட்டோவா காலிறுதியில்!

*பாரிஸ், ஒக். 07*

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் பெட்ரா கிவிட்டோவா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

களிமண் தரையில் நடக்கும் போட்டிகளில் பிரபலமானது பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ். இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில், தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருக்கும் கிவிட்டோவா 6-2, 6-4 என்ற நேர் செற்களில் சீனாவின் ஜோங் ஷூவாயை வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டில் குவிட்டோவா 5-2 என முன்னிலையில் இருந்தபோது, ஜாங் ஷூவாய் உடல் உபாதை காரணமாக சிகிச்சை எடுத்தார். எனினும், பின்னர் தொடர்ந்த ஆட்டத்திலும் கிவிட்டோவாவின் ஷொட்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர், தோல்வியைத் தழுவினார்.

கிவிட்டோவா தனது காலிறுதியில் ஜேர்மனியின் லாரா சிக்மண்ட்டை சந்திக்கிறார். 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரெஞ்சு ஓப்பனில் காலிறுதிக்கு முன்னேறியமை இதுவே முதன்முறையாகும்.

கிராண்ட்ஸ்லாம் போட்டி ஒன்றின் காலிறுதிக்கு முதல் முறையாக முன்னேறியுள்ள லாரா சிக்மண்ட், முந்தைய சுற்றில் ஸ்பெயினின் பௌலா பதோசாவை 7-5, 6-2 என்ற செற்களில் வீழ்த்தினார். லாராவுக்கு எதிரான ஆட்டத்தில் குவிட்டோவா வெற்றி பெற்றால், பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் அரையிறுதிக்கு அவர் முன்னேறுவது அது 2ஆவது முறையாக இருக்கும். முன்னதாக கடந்த 2012-இல் அரையிறுதி வரை முன்னேறி, அந்தச் சுற்றில் அவர் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# சூர்யகுமாரின் அதிரடி ஆட்டத்தால் மும்பையிடம் ராஜஸ்தான் தோல்வி

*அபுதாபி, ஒக். 07*

சூர்யகுமார் யாதவின் அதிரடி ஆட்டத்தால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை 57 ஓட்டங்களால் வெற்றி கொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கும் ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் ஸ்மித் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரோஹித் சர்மா முதலில் தனது அணியை துடுப்பெடுத்தாடக் களமிறக்கினார். இதன்படி குயின்ரன் டி கொக் - ரோஹித் சர்மா இணை களமிறங்கியது.

இருவரும் இணைந்து பலமான ஆரம்ப ஆட்டத்தைக் கொடுக்கவில்லை. என்றாலும் ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

குயின்ரன் டி கொக் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் களம் புகுந்த சூர்யகுமார் யாதவ் அதிரடி ஆட்டத்தைக் காட்டினார்.

மறுமுனையில் ரோஹித் சர்மா 35, இஷான் கிஷான் 0, குர்னல் பாண்ட்யா 12 என்று வரிசையாக ஆட்டமிழந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் மும்பை இந்தியன்ஸ் 4 விக்கெட்கள் இழப்புக்கு 193 ஓட்டங்களைப் பெற்றது.

சூர்யகுமார் யாதவ் 47 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 79 ஓட்டங்களையும், ஹார்திக் பாண்ட்யா 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

ராஜஸ்தான் றோயல்ஸின் பந்து வீச்சில் கோபால் 2 விக்கெட்களையும், ஆரச்சர், தயாகி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

194 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு ஜய்ஸ்வல் - பட்லர் இணை தொடக்கம் கொடுத்தது.

முதல் ஓவரின் இரண்டாவது பந்திலேயே ஜய்ஸ்வல் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

பட்லர் நிலைத்தாட, ஸ்மித் 6, சாம்ஸன் 0, லோர்மர் 11, குர்ரன் 15, தெவாட்டியா 5, ஆர்ச்சர் 24, கோபால் 1, ராஜ்புத் 2 என்று வருவதும் போவதுமாக விளையாடினர்.

பட்லர் மட்டும் போராடி 4 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 70 ஓட்டங்களைக் குவித்து பற்றின்ஸனின் பந்தில் பொலார்ட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

18.1 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த ராஜஸ்தான் றோயல்ஸ் 136 ஓட்டங்களைப் பெற்று 57 ஓட்டங்களால் தோல்வி கண்டது.

மும்பை இந்தியன்ஸின் பந்து வீச்சில் பும்ரா 4 விக்கெட்களையும், போல்ட், பற்றின்ஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் சூர்யகுமார் யாதவ் தெரிவானார். (ஐ)



# ஆப்கான் வீரர் விபத்தில் பலி

*காபூல், ஒக். 07*

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர் நஜீப் தரகாய் வீதி விபத்தில் சிக்கி பலியானார்.

2014இல் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியில் அறிமுகமானார் நஜீப். 12 ரி-20 மற்றும் ஓர் ஒருநாள் போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் இரண்டாம் திகதி ஜலலாபாத்தில் வீதியைக் கடந்தபோது அந்த வழியாக வேகமாக வந்த கார் மோதியதில் பலமாகக் காயமடைந்தார் 29 வயது நஜீப்.

இதையடுத்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும் சிகிச்சை பலனின்றி நஜீப் மரணமடைந்தார் என்ற ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN இசை

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.10.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.